செய்தி வெளியீடு எண்.417 நாள்.8.7.2007

செய்தி வெளியீடு – 8.7.2007

முன்னாள் பிரதமர் சந்திரசேகர் அவர்களின் மறைவுக்கு
முதலமைச்சர் கலைஞர் இரங்கல்

இந்தியாவின் பிரதமராக விளங்கிய சந்திரசேகர் அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியும், மிகுந்த வேதனையும் அடைகிறேன். அவர் இறுதிவரை மதச்சார்பற்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்தவர். அன்னாரது மறைவு நமது நாட்டிற்கு மிகப்பெரிய இழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தார்க்கும், அவர்பால் அன்பு கொண்ட தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**